# வெள்ளி

# VELLI

News Magazine



30 சதம்

மார்ச் '73

# தயவுசெய்து மன்னிக்கவும்!

'வெள்ளி'யின் அடுத்த இதழ் ஏப்ரல் மாதத்தில் வெளிவராதென்பதை அன்பர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்த இதழ் வெளிவரும். ஆனால் எப்போது வெளிவருமென்பதை இப்போது என்னால் நிச்சயமாகத் தெரிவிக்க முடியவில்லை. சில மாதங்கள, சில ஆண்டுகள் கூடச் செல்லலாம்!

இரண்டு வருடங்களுக்கு முன்னால் வெள்ளியை ஆரம்பித்தபோது, சரியாகத்திட்டமிட்டு 'வெள்ளி'யை ஆரம்பித்திருப்பதாகத்தெரிவித்திருந்தேன். திட்டத்தில் எவ்வித தவறுமில்லை. ஆனால் எங்கள் நாட்டின் பொருளாதாரநிலை என்னுடைய திட்டத்துடன் ஒத்துவரவில்லை.

விளம்பரங்களின்றி ஒரு சஞ்சிகையை நடத்த முடியாதென்பது இப்போது எல்லோருக்குமே தெரியும். நாட்டின் பொருளாதார நிலை காரணமாக வர்த்தகர்களிடம் விளம்பரம் கேட்கும் வாய்ப்பில்லை. வர்த்தகத்தையும், பல தொழில்களையும் தனக்கே ஏகபோகமாக்கி வரும் அரசாங்கத்திடமிருந்து விளம்பரங்களைப் பெறும் சூழ்நிலையும்இல்லை.

எனது திட்டத்தில் ஏற்பட்ட பெரிய பள்ளம் இது. நிரவ முடியாதது.— இதைவிட, கடதாசிச் செலவு, அச்சுச் செலவு முதலியன மிக மிக அதிகமான அளவுக்கு அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன.

உற்சாகமும் வசதியுமுள்ள ஒருவர் இந்தத்தடைகளையெல்லாம் உடைத்துக் கொண்டு இந்த சஞ்சிகையை நடத்துவதுசாத்தியமே. ஆனால், துரதிர்ஷ்டவசமாகஎன்னுடைய சொந்த நிலையும் இப்போது திருப்திகரமான சூழ்நிலையில் இல்லை.

இந்த நிலையில், தொடர்ந்தும் வெள்ளியை இன்றைய விதத்திலேயே நடத்திக் கொண்டிருப்பது புத்திசாலித்தனமாகத் தோன்றவில்லை.

இதற்கு மாற்று என்ன? — அதை உடனடியாகத் தீர்மானிக்க முடியவில்லை.

ஆனால் —

'வெள்ளி'யின் அடுத்த இதழ் என்றோ ஒருநாள் நிச்சயமாக வரும்!

அதுவரை 'வெள்ளி'யின் பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் என்னை மன்னிப்பார்களென்று நம்புகிறேன்.

— தி. ச. வரதராசன்

■ டியூசன் கொடுக்கும் அரசாங்க ஆசிரியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாகக் கல்வி அமைச்சு அறிவித்திருக்கிறது. இன்றுள்ள நிலைமையில் 'டியூசன்கள்' நின்றுவிட்டால் என்ன நடக்கும்? மாணவர்களின் கல்வித்தரம் மிகக் கேவலமாகி விடும்! முக்கியமாக, உயர்வகுப்பு பரீட்சைகளுக்கு டியூசனை நம்பித்தானே படிக்கிறார்கள்? டியூசன் முறை நிச்சயமாகத் தவறானதுதான். என்ன செய்வது? வீட்டிலே தாயார் ஒழுங்காகச் சமைத்துப் போடவில்லை. பையன் கடையிலே சாப்பிடுகிறான். பையனுக்குக் கடையில் சாப்பாடு போடாதே என்று தடுத்துவிட்டால் அவனுடைய கதியென்ன?

■ உலகில் கம்யூனிஸக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் இரண்டு பெரிய நாடுகள் ரஷ்யாவும், சீனாவுந்தான். உலகின் பிற நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளெல்லாம் மேற்குறித்த இரண்டுநாடுகளில் ஒன்றையே தமது வழிகாட்டியாகக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த இரு நாடுகளான ரஷ்யாவும் சீனாவும் ஒன்றையொன்று பார்த்து உறுமிக் கொண்டிருக்கின்றன!

■ பிரபல இந்திநடிகர்ராஜேஸ் கன்னாவை சினிமா உலகுக்கு அறிமுகம் செய்துவைத்து சான்ஸ் வாங்கிக் கொடுத்தவர் அஞ்சு என்ற நடிகை. அந்த நடிகையையே இப்போது ராஜேஸ்கன்னா திருமணம் செய்து கொண்டிருக்கிறார்.

■ வடமாகாணத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளைகளை அமைத்ததன் மூலம் பெரியதோர் பொருளாதாரப் புரட்சியை உண்டாக்கி விட்டதாகக் கூறியிருக்கி



றார் அமைச்சர் குமாரசூரியர். நல்லவேளை, இந்த 'உண்மை'யை அவர் வடமாகாணத்தில் கூறவில்லை. கிழக்கு மாகாணத்தில் போய் கூறியிருக்கிறார்!

■ 'தமிழ் மக்களும் தங்களைப் போலச் சமத்துவமாகவாழ வேண்டுமென்பதைச் சிங்கள மக்கள் உணரவேண்டும். இதற்கான முயற்சிகளை அரசு தொடர்ந்து செய்து வருகிறது' என்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த நிதியமைச்சர் என் எம். பெரேரா கூறியிருக்கிறார். மிகவும் நல்ல நல்ல கருத்து. அமைச்சர்களுக்கெல்லாம் இந்த மனப்பான்மையிருக்குமானால் தமிழர் பிரச்சினை என்று ஒன்றில்லாமலே போய் விடும். ஆனால், யாழ்ப்பாணத்தை விட்டுஅப்பால்போனதும் அமைச்சர்கள் இந்த மனப்பான்மையை மறந்துவிடுகிறார்களே!

தமிழ் நாட்டில் இப்போது மிகக் கடுமையான மின்சாரப்பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. பல தொழிற்சாலைகள் இதனுல் பாதிக்கப்பட்டிருப்பது தவிர, வீடுகளுக்கும் மின்சாரக் கட்டுப்பாடு செய்திருக்கிருர்கள். இதுகுறித்து குடும்பக்கட்டுப்பாட்டு இலாகா கவலைப்படுகிறதாம். மக்களுக்குச் சினிமாமுதலிய பொழுதுபோக்குகள் குறைகிறது. வீடுகளில் இருட்டின் ஆட்சி அதிகமாகிறது! இருட்டிலேதான் பாலுணர்வு அதிகமாகிறது!—குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம் மிகவும் பாதிக்கப் பட்டுவிடலாம்!

கள் சேர்க்கும் ஒரு தொழிலாளி, தனது தொழில்மூலம் நாளொன்றுக்கு ரூ. 32 சம்பாதித்து வருகிருர். கிளிநொச்சியில் நடந்த கூட்டமொன்றில் நிதியமைச்



சர் இந்தத் தொழிலாளியைக் கௌரவித்துப் பரிசும் வழங்கியிருக்கிருர். அதிக பணம் சம்பாதிக்கிறவர்களைக் கண்டால் நிதிமந்திரிக்கு மகிழ்ச்சி ஏற்படுவது இயல்புதானே! — வருமானவரிப் பணம் வந்து சேருமல்லவா!

எங்களுக்கு ஏதாவது வருத்தம் வந்த உடனே வைத்தியரிடம் ஓடிப்போகிறேம். வருத்தம் வந்துவிட்டால் உடல்நலம் மிகவும் பாதிக்கப்படுகிறது மட்டுமல்ல, பொருளாதாரமும் பாதிக்கப்படுகிறது. ஆனுல் சில பாதுகாப்பு நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொள்வதன்மூலம் முக்கியமான பல நோய்கள் நம்மை வந்தடையாமல் பார்த்துக் கொள்ளமுடியும். பெரியம்மை நோய் வராமலிருக்க அம்மைப்பால் கட்டிக்கொள்ளலாம். கசநோய் பாதிக்காமலிருக்க பி. ஜி. ஜி. மருந்து ஏற்றிக் கொள்ளலாம். இப்படிப் பல கொடிய நோய்கள் எம்மை அணுகாமலிருக்க, முன்னேற்பாடாகவே தடை மருந்துகளை உபயோகிக்கலாம். ஆனுல் எத்தனைபேர் அப்படிச் செய்கிறேம்? வருத்தம் என்று வந்துவிட்டபிறகும்கூட, தானுகவே மாறிவிடாதா என்று நாலு நாள் பார்த்த பிறகுதானே வைத்தியரிடம் ஓடுகிறேம்?

## சினிமா நடிகர் சிவாஜி!

எம். ஜி. ஆர். சினிமாவில் நடித்துக் கொண்டிருந்தாலும், இப்போது ஒரு அரசியல்வாதியாகவே கருதப்படுகிருர். ஆனுல் சிவாஜி கணேசனே அரசியலில் கால்வைத்திருந்தபோதிலும் ஒரு சினிமா நடிகராகவே கருதப்படுகிருர்!

# தாழ்வு மனப்பான்மையை தகர்த்து எறிவது எப்படி?


தன்னைத்தானே குறைகூறிக் கொண்டும், தன்னில் ஏதோ ஒரு குறை இருப்பதாக வீண் கற்பனை செய்து கொண்டும் வாழ்பவரிடம் தாழ்வு மனப்பான்மை குடிகொண்டுவிடும். இப்படிப்பட்டோர், தன்னைத் தனது நண்பர்கள், ஆசிரியர்கள், சகஊழியர், உற்றார் உறவினர், தன்னைப்பாராட்டாது வேண்டும் என்றே ஒதுக்குகின்றனர் என்ற மனப்பிரமையினால் வாடி வதங்கி அதனால், தெரிந்தோ தெரியாமலோ, தாழ்வு மனப்பான்மையினைத் தனது மனதில் குடிகொள்ளச் செய்துவிடுகின்றனர். இத்தாழ்வு மனப்பான்மை மனதில்தோன்றிவிட்டால் இயற்கையாகவே மனிதனிடம் அமைந்துள்ள விவேகம், புத்திசாலித்தனம், துணிவு முதலியன குன்றி அதனால், வாழ்வின் வளமும் வளர்ச்சியும் குன்றிட ஏதுவாகும்.

## தாழ்வு மனப்பான்மை ஏன் ஏற்படுகிறது?

சிறு பிராயத்திலும், மாணவப்பருவத்திலுமே தாழ்வு மனப்பான்மை பலரை ஆட்கொள்கின்றது. இச்சிறு வயதில் பீடிக்கப்பட்ட தாழ்வு மனப்பான்மை, ஒருவரின் வாழ்வில் கணிசமர்ன வயது வரை பீடித்து அவரது வாழ்வின் துரித முன்னேற்றத்திற்கும் முயற்சிக்கும் முட்டுக்கட்டையாக விளங்குகின்றது.

## உயரத்தில் குன்றியோர் யாவரும் தாழ்வு மனப்பான்மையினால் வாடுகின்றனரா?

பொர்துவாக உயரத்தில் குறைந்தோர் யாவரும் தமது வாழ்வில், ஒரு சில வருடங்களா



க. குகதாசன்

வது, தாழ்வு மனப்பான்மையி ஞல் வாடுகின்றனர் என்று மனோ தத்துவ நிபுணர்கள் கூறுகின்ற னர். இட்லர், நெப்போலியன் முதலிய குள்ள உருவம் கொண் டோர் தாழ்வு மனப்பான்மை யால் வாடி, அத்தாழ்வு மனப் பான்மையினை அகற்ற எடுத்துக் கொண்ட பெருமுயற்சியே அவர் களது பேர் அவாவாகப் பரிண மித்தது என்று சரித்திரக் கதாசி ரியர்கள் கூறுகின்றனர். இதனுல் உயரம் குன்றியோர் அனைவரும் தாழ்வு மனப்பான்மையினுல்வாடு கின்றனர் என்று திடமாகக் கூற முடியாது. இது ஒரு பொது விதியே.

உயரத்தில் குன்றியோர், த மது சிறு பருவத்தில் பாடசாலைக் குச் செல்லும்போது, மற்றய சக மாணவர்களின் பரிகாசத்திற்கு ஆளாகின்றனர். "கட்டையன் வந்துவிட்டான்", "நெட்டை யனை நம்பினுலும் கட்டையனை நம்பாதே", "கட்டையன் படிப் பிலும் கட்டைதான்" இது போ ன்ற மதியற்ற பரிகாசங்கள் மற் றயமாணவரினுல், இம்மாணவன் மீது வீசப்படுகின்றது. இவ்வாச கங்களினுல் வெதும்பி வேதனை யுறும் மாணவன் ஒருவன், தனது கல்வியிலும் அதிக கவனம் செலு த்தாது, என்னை எல்லோரும் ஒது க்குகின்றனர், நான் எல்லாவற்றி லும் கட்டைதானு? என்று மனம் வருந்திப் பலமுறை தன்னைத் தானே குறைவாக எண்ணுதலே, நாளடைவில் இவரிடம் தாழ்வு மனப்பான்மையினை உண்டு பண் ணிவிடுகின்றது.

## குனிந்து நடப்போரும் தாழ்வு மனப்பான்மையி ஞல் வாடுகின்றனரா?

குனிந்து நடப்போரிடமும் தாழ்வு மனப்பான்மை குடிகொ ண்டுளது எனக்கூறலாம். மற்றை யோர் என்னைப்பற்றி என்ன எண்ணுவார்கள்? நான் இப்படி உடுத்துக்கொண்டு சென்ருல் என்னை ஓர்வேஷதாரி என்பார்களா? இப்படி அழகற்ற சட்டையைப் போட்டால் என்னை அவர்கள் மத்தியில் நாகரீகம் அற்றவன் என்று எண்ணுவார்களோ அன் றேல் ஏன்என்று ஒதுக்கிவிடுவார் களோ அன்றேல் கஞ்சல்பேர்வழி என எண்ணி ஒதுக்கிவிடுவார் களோ எனப் பலவாறு கற்பனை பண்ணி, உலகம் முழுவதும் தன் னைத்தான் கவனிக்கின்றது என வும் வீண்பிரமையும் அச்சமும் பிடித்தோரே, மற்றையோருக்கு அஞ்சிக் கூனிக் குறுகி நடக்கின்ற னர். இவர்களையும் தாழ்வு மனப் பான்மை பீடித்துள்ளது என்று திடமுடன் கூறலாம்.

## வேறு எவர் தாழ்வு மனப் பான்மைக்கு அடிமைப்படக் கூடும்?

உயரம் குன்றியோர், குனி ந்து நடப்போர் முதலியோரிட முமல்லாது, அங்கம் குறைந் தோர், அறிவு ஆற்றல் முதலிய வற்றைப் பிரயோகிக்கத் தவறுப வர்கள், மற்ருேருடன் நேசமாகக் கலந்துரையாடாமல் அல்லது விளையாடாமல் தனித்து வாழ எண்ணுபவர்கள், சினேகிதர்களை யோ ஆசிரியர்களையோ கண்டால்


ஒளிப்பதற்கு மறைவிடம் தேடுப வர், மற்றோருடன் உரையாடக் கூச்சப்படுவோர், பெற்றோரினால் ஆசிரியரால் வெறுக்கப்படுபவன், தன்னை எல்லோரும் போற்றிப் புகழவேண்டும் என எதிர்பார்த்து அதில் தோல்வி அடைபவன் ஆகி யோரும் தாழ்வு மனப்பான்மை க்கு அடிமையாகக் கூடும்.

நான் சுந்தரத்திலும் பார்க்க அழகில் குன்றியவன், ஆகவே அவனிடத்தில் எல்லோரும் அன்பு டன் நடக்கின்றனர். அவனைவிட நான் திறமைசாலியாக இருந்த போதும் ஆசிரியர்கள் அவனையே பாராட்டுகின்றனர் என்று நாள் தோறும் வெதும்பித் தன்னைத் தானே குறைவாக மதிப்பிடும் மாணவனிடத்தும் குமாரினு டைய 'கைஎழுத்துமிக அழகானது அதனாலேயே அவனுக்கு ஆசிரியர் கள் கூடுதலான புள்ளி கொடுப்ப துடன் நில்லாது அவனைப்பற்றிப் போற்றிப் புகழுகின்றனர் என்று வேதனையுறும் மாணவனிடத்தும் இத்தாழ்வு மனப்பான்மை சிறிது சிறிதாக வேரூன்றலாம்.

''நீ ஒன்றுக்கும் உதவாய்'' ''உன்மூளை களிமண்ணினால் ஆனதுதான்'' என்று பலசமயம் பெற்றோரினாலோ ஆசிரியரி னாலோ, தூற்றப்படும் மாணவன், இத்தூற்றல்களை எண்ணிஎண்ணி ஏங்குவதனாலும், பொதுவாகமற் றோரினால் வெறுக்கப்படும் ஒதுக் கப்படும் எள்ளிநகையாடப்படும் இளைஞர் பலர் தம்மில் ஏதோ குறையிருக்கின்றது என எண் ணித், தம்மைக் குறைவாகஎண் ணுவதினாலும் இத்தாழ்வு மனப் பான்மை பிடிக்கக்கூடும்.

## அகற்றுவது எப்படி?

உலகில் எல்லோருக்கும், எல் லாப் பெருஞ் செல்வமும் கிடைப்பதில்லை, ஆனால் எல்லோ ரும் ஏதோ விதத்தில், ஏதோ



'யாழ்ப்பாணத்தில் எங்களுக் கும் கறுப்புக் கொடி காட் டியிருக்கிறார்கள் தமிழர் கூட்டு முன்னணியினர். இந்தத் தலைவர்கள் கொழும்புக்கு வரும் போது நாங்களும் கறுப்புக் கொடி காட்ட முடியும், ஆனால் நாங்கள் அப்படிச் செய்யமாட் டோம். பெருந்தன்மையாக நடந்து கொள்வோம்' என்று கூறியிருக்கிறார் ராஜபக்ஸ -இது ஒரு புத்திசாலித்தனமான அபிப்பிராயமாகத் தெரியவில்லை. 'உங்கள் ஊருக்கு வந்தபோது நீங்கள் என்னை அவமதித்தீர்கள். எங்கள் ஊருக்கு நீங்கள் வரும்போது நாங்களும் உங் களை அவமதிக்க முடியும்' என்று அமைச்சரே 'பிரித்து' வைத் துச் சொன்னதுபோல இல் லையா? ஆனால் அமைச்சர் கென மன் இந்த மாதிரி அபிப்பிராயம் எதுவும் சொல்லவில்லை. மிக வேடிக்கையாக த. கூ. முன்ன ணியினரைக் கிண்டல் செய்து பழி வாங்கியிருக்கிறார்!

செயலில், ஏதோ துறையில் சிறந்து மிளிர்ந்து பொலிந்து முன்னணியில் விளங்கமுடியும். இயற்கையாக எனக்குக் கிடைத்த இக் கொடையினை (ஆடல், பாடல், கல்வி, தோட்டக்கலை, வியாபாரம்) எனது சிறப்பால் மேன்மேலும் சிறப்புறச் செய்வேன் என்று திடசங்கற்பம் பூணல் வேண்டும்.

## பாராட்டுதலை எதிர் பார்க்க வேண்டாம்.

உம்மைப் பாராட்டுவதற்காகவா உலகில் மற்றோர் அவதரித்தனர்? உலகில் பாராட்டுப் பெறுவது கடினம். தூற்றல், பெறுவது மிகச் சுலபம். ஒருவனிடம் குறைகாணும் மனிதன் அவனிடமிருக்கும் சிறப்புக்களைப்பற்றிப் போற்றிப் புகழ மாட்டான். ஆகவே ஒருவர் உம்மைப்பற்றிக் குறைகூறினுல் என்னிடமுள்ள பற்பல செயற்கரிய சிறப்புக்களைக் கூருது என்னிடமுள்ள ஒரேயொரு குறையையே கூறினர் என்ற பேருண்மையை உணருதல் வேண்டும். குமாரினுடைய எழுத்து வடிவானதுஎன வேதனையுறுத்தலைத் தவிர்த்து, குமாரினுடைய எழுத்து மிக அழகானது தான். ஆனுல் என்னைப்போல் ஞாபகசக்தியும் விவேகமும் அவனிடமில்லையே. எனது விடாமுயற்சியினுல் அவனது அழகான எழுத்துக்களைவிட மிக அழகாக நான் அடுத்த வருடம் எழுதுவேன். அதற்காக நான் முயற்சி செய்தல் வேண்டும் எனக்கூறி அதற்காசப்பாடுபடல் வேண்டும்.

சுந்தரத்தின் அழகையிட்டுப் பொருமைப்படாமல், சுந்தரம் அழகானவன்தான் ஆனுல் என்னிடமுள்ள தேகபுஷ்டி அவனிடமில்லையே! அவனே ஒல்லி, நானே பலசாலி. அவனுக்கு இணையான அழகு என்னிடமில்லாவிடினும், துப்புரவாகவும் தூய்மையாகவும் வாழ்ந்தால் என்னிடத்திலும் பலர் வாஞ்சையுடன் நடந்து கொள்வார்கள் என்று எண்ணித் துப்புரவாகவுந் தூய்மையாகவும் வாழ்ந்திடல் வேண்டும்.

நான் கட்டையன்தான். ஆனுல் உலகில் நான் மட்டுமா கட்டையன்? உலகில் என்னைவிடக் கட்டை உருவம் கொண்டோர் பலர் உளர். கட்டை உருவமுடையோர் பலர் — இட்லர், நெப்போலியன், சாஸ்திரி செயற்கரிய செயல்களைச் செய்யவில்லையா? யப்பானியர் உயரத்தில் குள்ளரே. கட்டையர்கள், சப்பை மூக்கோர் என்று பலரினுல் எள்ளி நகையாடப்பட்டபோதும்உலகம் வியக்கும் வண்ணம் அவர்கள் முன்னேறவில்லையா? நான் கட்டையனுகப் பிறந்து விட்டேனே என எண்ணி ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் நெட்டையன் ஆகிவிடுவேனு? நான் உயரத்தில் மட்டும்தானே கட்டை. ஆனுல் கல்வியிலும் விவேகத்திலும் மற்றையோரைவிடத் திறமைசாலிதானே, என்எண்ணுதல் வேண்டும்.


## நிமிர்ந்து நில், நிமிர்ந்துநட

நிற்கும்போது நிமிர்ந்து நில்லுங்கள், இருக்கும் போது, நிமிர்ந்து இருங்கள். நடக்கும் போது நிமிர்ந்த பார்வையுடன்

நடவுங்கள். எழுதும்போதும், படிக்கும் போதும், கடமை ஆற்றும்போதும், அலட்சிய மனப்பாங்குடன் செய்யாது, வெறுப்பை அகற்றி விருப்புடனும் ஆர்வத்துடனும் செய்யுங்கள், அலட்சிய மனப்பான்மையுடன் எவ்விடயத்திலும் எச்செயலிலும் நடந்துகொள்பவனிடமிருந்து தாழ்வு மனப்பான்மை என்ற மூதேவி விடைபெறமாட்டாள்!

## உலகம் உங்களைச் சுற்றவில்லை

தங்களையே மையமாக வைத்து, தங்களையே உலகம் சுற்றுகின்றது என்று கருதுபவர்களே "இப்படி நான் செய்தால் அவர் என்ன நினைப்பாரோ?'' ''அவர் சிரிப்பாரோ?'' என்னைப் பற்றி மற்றோருக்குச் சொல்லி எனது மானத்தை வாங்குவாரோ?'' என்று எண்ணி ஏங்கிடுவர், உலகில் உம்மைப்பற்றி எண்ணுதலைவிட மற்றோருக்குப் பல விடயங்கள் உள! அவர்கள் தம்மைப் பற்றியும் தம் உற்றார் உறவினர்களைப் பற்றியும் எண்ண நேரமில்லாத போது உம்மைப் பற்றி எண்ணிட அவர்களுக்கு நேரம் ஏது? நீர் சதா நேரமும் மற்றையோரைப் பற்றியும் அவர்களது நடையுடை பாவனையிலுமா ஈடுபடுகின்றீர்? உம்மைப் போலவே மற்றோரும் தம்மைப் பற்றியே அதிக கவனம் செலுத்திடுவர். ஆகவே மற்றோர் இப்படி எண்ணுவார்



பாலச்சந்தர் டைரக்ட் செய்த 'அரங்கேற்றம்' என்ற புதிய நியூவேவ் படம் சமீபத்தில் தமிழ் நாட்டில் திரையிடப்பட்டிருக்கிறது. (வயது வந்தவர்களுக்கு மட்டும்) என்ற பிரிவில் இதைத் திரையிட அனுமதித்திருக்கிறார்கள் சென்சார் போர்ட். பழைய நடிகை என். எம். ராஜமும் இதில் தாயாராக நடித்திருக்கிறார். கதாநாயகியாக நடித்துள்ள பிரமீளா இந்தப்படத்தோடு பெரிய ஸ்டாராகி விடப்போகிறார்!

சென்ற மாதம் அமரரான டி. கே. சண்முகத்தை தமிழ் நாடக உலகம் ஒரு போதும் மறக்க முடியாது. நாடகத் துறைக்கு அவர் ஆற்றிய சேவைக்காக மேலவை உறுப்பினர் பதவியையும், 'பத்மஸ்ரீ' என்ற பட்டத்தையும் அரசாங்கம் அவருக்கு அளித்துக் கௌரவித்தது. ஆனால் நடிகர் என்ற காரணத்துக்காக அன்றி, அவருடைய தூய்மையான வாழ்க்கைக்காக அவருக்குப் பெரும் கௌரவம் கொடுத்திருந்தது சமூகம். **1971**-ல் சென்னையில் நடைபெற்ற அவருடைய மணிவிழாவைக் காணும் சந்தர்ப்பம் எனக்கு வாய்த்திருந்தது. கலையுலகுடன் சம்பந்தப்பட்ட அனைவருமே கட்சி வேறுபாடின்றி அன்று அவரைப் பாராட்டி மகிழ்ந்ததை நான் நேரில் பார்த்தேன். ஒரு மனிதனுக்கு தனது வாழ்க்கையில் கிடைக்கக் கூடிய மிகச்சிறந்த பாக்கியமாக அப்படி ஒரு விழாவைக் குறிப்பிடலாம்.

களோ, சிரிப்பார்களோ, குறை நினைப்பார்களோ என்ற கவலையை விட்டகலுங்கள்.

## புதியதோர் கண்ணோட்டம்!

குறுகிய கண்ணோட்டத்துடனும், தாழ்வு மனப்பான்மையுடனும் வாழ்ந்த நேற்றைய வாழ்வினை மறந்து விடுங்கள்! இன்றைய வளத்திலும், நாளைய வளர்ச்சியிலும் நாட்டம் கொள்ளுங்கள்! நீங்கள் செய்யும் தொழிலோ அன்றேல் கல்வியிலோ உங்களுக்கு நிகர் நீங்களே என எண்ணிப் பெருமைப் பட்டு அவ்விலட்சியத்தினை அடையப் பாடுபடுங்கள்! இன்று நான் முன்னணியில் நிற்காவிட்டாலும், நாளடைவில் நானே எல்லோரையும் விடத் திறமையாகவும் சிறப்பாகவும் விளங்குவேன் என எண்ணிப் புதுத் தெம்புடன் வாழுங்கள்! ஒவ்வொரு நாளும் எல்லா விதத்திலும் நீங்கள் முன்னேறி முன்னேறி வருகின்றீர்கள் என்ற சுய மந்திரத்தைக் கூறி வாருங்கள்.

''ஒவ்வொரு நாளும் எல்லா விதத்திலும் நான் முன்னேறி வருகின்றேன்''

**"Every Day And in Every Way I Am Getting Better And Better"**

இப்படிச் செய்துவந்தால், தாழ்வு மனப்பான்மை அகன்று, பொங்கிடும் இளமையில் பூரிப்புடன் வாழ்ந்திடலாம். ●

■ கூந்தல் அடர்த்தியாகவும், கருமையாகவும் வளர்வதை கூந்தல் தைலங்களினால் மட்டும் சாதித்து விட முடியாது. உடல் நல்ல ஆரோக்கியமாக இருந்தால்தான் கூந்தலும் நன்றாக வளரும். உடம்பிலே தோன்றும் சில நோய்களினால் தலைமயிர் உதிர்ந்துவிடுவதைச் சாதாரணமாகப் பார்க்கிறோம்தானே? உடல் நலம் மட்டுமல்ல. மனமும் நல்ல ஆரோக்கியமாக இருக்க வேண்டும். மனக்கவலைகளும் கூந்தல் அழகைப் பாதிக்கக் கூடியன !

■ 'ஆளும் கட்சிக்குக் கட்டுப் பட்டவர்களாக நீதிபதிகள் இருக்கும் ஒரு நாட்டில் வாழ்வதற்கு நான் விரும்பமாட்டேன்' என்று இந்தியாவின் பிரதம நீதியரசராக இருந்து இளைப்பாறிய டாக்டர் பி. பி. கஜேந்திர கட்கர் கூறியிருக்கிறார். உண்மைதான் நீதிபதிகளின் மீது ஆளும் கட்சி அதிகாரம் செலுத்தும் நாட்டில் நீதி இருக்காது. ஆளும் கட்சியின் விருப்பந்தான் நீதி என்ற பெயரில் இருக்கும்!

■ உலகப் புகழ்பெற்ற அமெரிக்கப்பெண் எழுத்தாளர் பேண் பக் சமீபத்தில் மரணமானார். 1938 ம் ஆண்டில் இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற இவருடைய பல முக்கியமான நாவல்கள் சீனநாட்டுச் சூழலில் அமைந்தவை. இவர் தமது வாழ்நாளில் பெரும்பகுதியை சீனாவில் கழித்ததே இதற்குக் காரணமாகும். இவர் இறக்கும் போது இவருக்கு 80 வயது! ஆயினும் தமது கடைசிக்காலம் வரை இவர் எழுதிக் கொண்டேயிருந்தார்!



கோழிமுட்டையில் 'சைவ முட்டை' இருக்கிறது: ஆண் கோழியின் சேர்க்கை இன்றியே முட்டை இடக்கூடிய சில இனக் கோழிகள் இருக்கின்றன. இந்த முட்டைகளிலிருந்து குஞ்சும் வெளிவராது. ஆகவே இந்த முட்டையை உண்பதால் பாவமில்லை என்று சிலர் கருதுகிறார்கள். இதே மாதிரி 'சைவ' இறைச்சியையும் அமெரிக்காவில் தயாரிக்கிறார்கள்! தாவரப் பொருள்களிலிருந்தே தேவையான அளவு சீவசத்துக்கள், புரதம், தாது உப்புக்கள் முதலியவற்றைச் சேர்த்து இந்த இறைச்சியைத் தயாரிக்கிறார்கள். யாராவது சொன்னாலொழிய, இது செயற்கை இறைச்சி என்பதைச் சொல்ல முடியாதாம். சுவையிலும் சரி, ஊட்டச் சத்திலும் சரி இது அசல் இறைச்சியைப் போலவே இருக்கிறதாம்!

கவிஞர் கண்ணதாசன் தினமணிக்கதிரில் 'அர்த்தமுள்ள இந்து மதம்' என்ற தொடர் கட்டுரைகளை எழுதி வருகிறார். ஒரு காலத்தில் கடும் நாஸ்திகவாதியாகஇருந்த கண்ணதாசன் இன்று ஆஸ்திகவாதம் செய்து வருகிறார். இதுவும் அவருடைய நேர்மையான உள்ளத்தையே காட்டுகிறது. வீண்கௌரவத்துக்காக மனத்திலுள்ளதை மறைத்துப் பேசாதவர் கண்ணதாசன். இவருடைய கவிதைகளைப் போலவே இந்தக் கட்டுரைகளும் மிகுந்த பாராட்டுக்களைப் பெற்றுவருகின்றன.

## புதிய நூல்

'நந்தி நூல்கள்' என்ற தொடரில் முதலாவது நூல் வெளிவந்திருக்கிறது. இதன் பெயர்: 'அன்புள்ள நந்தினி'. பெயரைப் பார்த்ததும் ஏதோ நாவல் என்று நினைத்துவிடப் போகிறீர்கள். இதை எழுதிய டாக்டர் 'நந்தி' நாவல்களை எழுதக்கூடியவர்தான். ஆனால் இந்த நூல் ஒரு நாவல் அல்ல. இது ஒரு அறிவு நூல். குழந்தை வளர்ப்புப் பற்றி அன்புள்ள நந்தினிக்கு அவளுடைய அண்ணா எழுதிய கடிதங்கள்தான் இந்த நூல். ஒரு நாவலை எழுதுவதற்கு எத்தனையோ எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் இத்தகைய ஒரு அறிவு நூலை எழுதுவதற்கு டாக்டர் 'நந்தி' போன்ற ஒரு சில எழுத்தாளரால்தான் முடியும். ஒரு சிறு குழந்தையைஎவ்விதம்பத்திரமாக வளர்க்கவேண்டுமென்பதை விஞ்ஞான பூர்வமாகவும், இலக்கிய நயத்துடனும் எழுதியிருக்கிறார் 'நந்தி'. குழந்தை வளர்ப்பில் தொடர்பு இல்லாதவர்கள் கூடச் சுவையுடன் வாசிக்கும்படி இப்படி ஒரு அறிவு நூல் எழுதித் தர வேறு யாரால் முடியும்? எழுத்தாளர் டாக்டர் நந்திக்கு தமிழுலகம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

(நந்தி வெளியீடு, 10/8ஏ, 4 லேன், கொழும்பு-13 விலை ரூபா 2-50)

மனிதனுக்கு மனிதன் வேறுபாடுகளையும், உயர்வு தாழ்வுகளையும் கற்பித்து இன, மத, மொழித் துவேஷங்களை வளர்த்து பாழ்பட்டுக் கிடந்த சோவியத்நாடு, புரட்சிக்குப்பின் பிரமிக்கத் தக்க வளர்ச்சியடைந்திருக்கிறது! இரண்டே இரண்டு தேசிய மொழிகளையுடைய எமது நாடும் சோவியத் வழியில் முன்னேற முடியாதா!

சமீபத்தில் சோவியத் நாட்டில் பயணம் செய்து, நேரில் பார்த்து அனுபவித்து தோழர் வ. பொன்னம்பலம் எழுதிய குறிப்புகளிலிருந்து........................

# கஷாக்ஸ்தான் குடியரசு!

சோவியத்நாட்டின் இன்றைய வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருப்பது அந்தநாட்டின் இன, மத, மொழி வேறுபாடற்ற அரசியல் திட்டந்தான். எவ்வித வேறுபாடுமற்ற விவசாயிகளினதும் தொழிலாளர்களினதும் ஒருமித்த ஒத்துழைப்பினுல்தான் அந் நாடு இன்று உலகின் முன்னணி நாடாகத் திகழ முடிந்திருக்கிறது.

உதாரணமாக சோவியத் நாட்டின் ஒரு அங்கமான கஷாக்ஸ்தான் குடியரசைப்பார்க்கலாம். இந்தக் குடியரசின் உயர் ஆட்சிபீடத்தில் கசாக், யூக்கிறேனியன், வைலோறசியன், உஸ்பெக், ஆர்மேனியன், ராப்டன் கொர்ரியர், ஜெர்மனியர், ஆகிய எல்லா இனமக்கள் தலைவர்களும் அங்கம் வகிக்கிறுர்கள். எந்த ஒரு பகுதி மக்களும் அங்கே ஒதுக்கப்படவில்லை.

கஷாக்ஸ்தான் நாட்டில் நாடோடி மக்களாகத் திரிந்தவர்களின் வழித்தோன்றல்கள் இன்று ஜெட்விமானங்களைச் செலுத்துகிறுர்கள். எஃகை உருக்குகிறுர்கள். அணுவின் மர்மங்களைத் துலக்குகிறுர்கள். இவை மட்டுமல்ல; கதை கவிதை நாடகங்கள் எழுதி இலக்கியம் படைக்கிறுர்கள்!

சோவியத் புரட்சிக்கு முன்பு கஷாக்ஸ்தானில் 22 பேராசிரியர்கள் மட்டுமே இருந்தார்கள். இன்றோ ஏழுலட்சம் பேராசிரியர்கள் அந்த நாட்டு இளைஞர்களை உருவாக்குவதில் பணிபுரிகின்றனர்! 420 கலாநிதிகளுட்பட 27000 ஆராய்ச்சியாளர்களும் 6000 விஞ்ஞானிகளும் இன்றைய கஷாக்ஸ்தானில் உள்ளனர். புரட்சிக்கு முன்பு இந்த நாடுதான் மிக மோசமான அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்ததென்பதை இன்று நம்புவதே கஷ்டமாக இருக்கிறது!

## உறக்கமா? ஊகும் இனியெங்கெனக்கு!

# பிரிவு

**★ மாத்தனை செல்வம் ★**

அகிலமும் உறங்கும் அகாலவேளை
அங்கோர் லயத்தில் அழுகுரல் கேட்கும்
அக்குரல் கேட்க நெடுமூச்செறிந்து
அமைதியிழந்து விழித்தேயிருப்பேன்
(சள், சள்,) ளென்று குரைத்திடும் நாயும்,
சாவொலி எழுப்பும் காட்டுநரியும்
எங்கோ கேட்கும்; என்னையுலுப்பும்
அமைதியைக் கிழிக்கும் அழுகுரல் வந்து
அம்பென தைக்க, நினைப்பேனுன்னை
இக்குரல் புதிது அல்ல எனக்கு
இந்தியா ஏகிடும் ஏழைமக்கள்
பிரிவின் துயரால் பேயென அலறி
சிந்திடும் கண்ணீர் தனைநான் கண்டால்
ஐயோ, நானோர் நாயிலும் கேடு
ஆம் உனைப் பிரிந்து ஒருதிங்கள் கடக்க
உறங்காதிருக்கிறேன் உன்னை நினைத்து.

கூடிக்களித்த குன்றினை நினைப்பேன்
பாடித்திரிந்த பாதைகள் நினைப்பேன்
பச்சைப்பசிய தேயிலைக் காட்டில்
இச்சையுடன் நாம் ஏங்கிக்கழித்த
இடமும், நேரமும் நினைவில் வந்து
சித்திரவதையாய் என்னை வதைக்கும்
கடலைக்கடந்து நீ கப்பலில் சென்ற
காட்சியும் இன்னும் கரைந்திடவில்லை
பிரிந்தஅன்று பேதைநீ வடித்த
கண்ணீரென்னைக் காலந் தோறும்
வேலென அறுக்கும் விழிகள் இருந்தும்
வெளிச்சமில்லை; உயிரோடிருந்தும்
நடைப்பிணமாக நான்மிக மெலிந்து
இரவும் பகலும் உன்னை நினைத்து
ஏங்கியே கலங்கி என்னையிழப்பேன்
உன்னை நினைத்தால் விழிகள் மூடா
உறக்கமா? ஊகும். இனியெங்கெனக்கு!



பத்திரிகைகளில் சினிமா நடிகர் நடிகைகளைப் பற்றி, பெயரைக் குறிப்பிடாமல் சில 'கிசுகிசு' செய்திகள் வருகின்றனவல்லவா! இந்தச் செய்திகளைப் பற்றி பல நடிக நடிகையரிடமே அபிப்பிராயம் கேட்டு ஸ்ரீதரின் 'சித்திராலயா' வெளியிட்டிருக்கிறது. அநேகமாக எல்லா நடிக நடிகைகளுக்குமே இந்தக் கிசுகிசு செய்திகள் வெளிவருவது பிடிக்கவில்லை, ஆனால் லஷ்மி மட்டும் ஒரு வாசக ரஸிகருடைய நிலையிலிருந்து ''இந்தச் செய்திகள் உண்மையோ பொய்யோ, ஆனால் சுவாரஸ்யமாக இருக்கின்றன!'' என்று கூறியிருக்கிறார்.

சிகரெட் புகைப்பவர்களுக்கு 'கான்சர்' நோய்வருமென்று பெரிய பெரிய டாக்டர்களெல்லாம் சொல்கிறார்கள். சிகரெட்டுக்கு எதிராக உலகில் பல நாடுகளில் பிரச்சாரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் 'பாபுராவ் படேல்' என்ற பிரபல எழுத்தாளர் இதைப்பற்றி என்ன சொல்கிறார் தெரியுமா? 'நான் ஐம்பது வருடங்களாகப் புகை பிடிக்கிறேன். என்னுடைய குரல் கூட இன்னும் இனிமை மாறாமல் இருக்கிறது!' என்கிறார் பாபுராவ்: —சிலருக்கு இப்படி ஒரு முரட்டுத் துணிச்சல். இவருடைய குரல் கெட்டுவிடாமலிருப்பதால் சிகரெட் புகையின் அபாயத்தை இல்லையென்று சொல்லிவிடலாமா?


அரசாங்கத்தோடு தொடர்புள்ள விளம்பரங்களை கொடுக்க வேண்டாமென்று ஒதுக்கப்பட்டுள்ள பத்திரிகைகளில் 'ஈழநாடு' பத்திரிகையும் ஒன்றாகும். 'ஈழநாடு' தனது 14-வது ஆண்டு நிறைவு பற்றிய ஆசிரியத் தலையங்கத்திலேயே இதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. ஒதுக்கித் தள்ளி விடக்கூடிய செய்தியல்ல இது. ஒரு விஷயத்தைப் பற்றிய அறிவித்தலோ அல்லது ஒரு பொருளைப் பற்றிய விளம்பரமோ எதற்காக வெளியிடப்படுகிறது? அந்தப் பொருளைப் பற்றி எல்லோரும் அறிய வேண்டுமென்பதற்காகத்தானே? ஆனால் இலங்கை அரசாங்கம் விளம்பரங்களை வெளியிடுவது தன்பக்கம் உள்ள பத்திரிகளுக்கு 'லஞ்சம்' கொடுப்பதற்காகவா? ஒரு பத்திரிகை தனது தலையங்கத்தில் குறிப்பிடக்கூடிய அளவுக்கு இந்த 'லஞ்ச' வேலையை அரசாங்கம் பகிரங்கமாகவே செய்யத் துணிந்து விட்டதா? நாகரிக உலகம் இதைப் பார்த்து வெட்கித் தலைகுனிய வேண்டியிருக்கிறது. ஜனநாயகம், நேர்மை, பண்பாடு என்பவைகளுக்கெல்லாம் புதிய கருத்துக்கள் எழுத வேண்டும் போலிருக்கிறதே!

## புதிய நூல்

'குழந்தைகள் உலகம்' என்ற புதிய நூல் எனது பார்வைக்கு வந்திருக்கிறது. நா. செல்லப்பா எழுதிய நூல் இது. இப்போது தெருவுக்கு தெரு 'பாலர் பாடசாலை'கள் தோன்றியிருப்பதைக் காணலாம். முக்கியமாக அந்தப் பாடசாலை ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும். இந்த நூல் மிக மிக உதவியாகவிருக்கும். குழந்தைகளின் உடல் உள வளர்ச்சி குறித்து மிக விரிவாக இந்நூலில் விளக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்க எழுத்தாளர் ஆர். சி. ஓறெம் எழுதிய மொண்டி சோறிக்கை நூலைத் தழுவி இந்நூல் எழுதப்பட்டதாக ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார். வெளியீடு; வண்ணை வடகிழக்கு சனசமூக நிலையம், நீராவியடி, யாழ்ப்பாணம். விலை ரூ 4-00

கோப்பி, தேனீர் இரண்டுமே உடல்நலத்துக்கு ஏற்றவையல்ல என்று இரண்டு பானங்களையும் ஒரே தரத்தில் வைத்துக் கருத்துத் தெரிவிப்பதுதான் வழக்கம். வைத்தியர்கள்கூட இந்த இருபானங்களையும் ஒரே மாதிரித்தான் கணிப்பார்கள். ஆனால் இப்படிக்கணிப்பது தவறு என்று நிரூபித்திருக்கிறார் இலங்கை டாக்டர் ஒருவர். பிரிட்டிஷ் வைத்திய ஆராய்ச்சிக் கவுன்சிலில் பணியாற்றும் டாக்டர் ராஜபக்ஸ, 'கோப்பி மட்டுந்தான் உடல் நலத்தைக் கெடுக்கிறது. தொடர்ந்து கோப்பியை அருந்துபவர்கள் பலருக்கு இருதய நோய் ஏற்படுகிறது. ஆனால் தேனீரில் உள்ள 'தியோபிலின்' என்ற பொருள் இருதயத்துக்கு மிகவும் நன்மை பயக்கிறது' என்று தமது ஆராய்ச்சி மூலம் நிரூபித்திருக்கிறார். இலங்கை போன்ற தேயிலை விளைவிக்கும் நாடுகள் டாக்டர் ராஜபக்ஸவுக்கு மிகவும் நன்றி தெரிவிக்க வேண்டும்.

தோழர் வ. பொன்னம்பலம் கம்யூனிஸ்ட்கட்சியின் முழுநேர ஊழியராகக் கடமையாற்றி வந்தவர். கட்சியின் முழுநேர ஊழியருக்கு மாதச் சம்பளம் கொடுக்கப் படுகிறது. கட்சியின் மிக இறுக்கமான சில கட்டுபாடுகளிலிருந்து தம்மைவிடுவித்துக் கொள்ளும் நோக்கமாக தோழர் வ. பொ. தமது முழுநேரஊழியர் பதவியிலிருந்து விலகிக்கொண்டு விட்டதாகத் தெரிகிறது. தோழர் பொன்னம்பலம் தமது கட்சிக்கு ஒரு நேர்மையான உறுப்பினர். அதேசமயம் தம்மைச்சேர்ந்த மக்களுக்கு ஒரு உண்மையான தொண்டர். தமது மக்களின் நலனும், கட்சியின்



கட்டளைகளும் எப்போதாவது மோதிக்கொள்ளுமானால் இத்தகைய தலைவர்களின் நிலைமை மிகவும் கஷ்டமாகி விடுகிறது!

ஒரு
குளிர்ச்சியான
கதை

# கடத்தல் வைரங்களும் நானும்

காத்துக் கொண்டிருந்தேன்.

''எதற்காகப் பெரியவர் என்னைக் கூப்பிட்டாரோ தெரியவில்லையே? ஏதேனும் பெரிய விஷயமாய்த்தானிருக்க வேண்டும்....'

கதவுக்கு வெளியே வந்த 'செக்ரட்டரி', 'நான் உள்ளே போகலாம்' என்பதற்கறிகுறியாகத் தலையை அசைத்தார்.

உள்ளே போனேன்.

'டேக் யுவர் ஸீட்...'

'தாங்க் யூ ... '

வழக்கமான - ஆங்கில - நாகரீக உரையாடல்களுக்குப்பின்,

''இதோ இந்த ஃபைலைப் பாருங்கள்'' என்றவாறு, 'ஸீக்ரெட்' என்று எழுதப்பட்ட ஒரு ஃபைலைத்தூக்கி என் முன்னே போட்டார் மேலதிகாரி.

எடுத்துப் புரட்டினேன்.

45 வயது மதிக்கத்தக்க ஒருவரது இரு போட்டோக்கள் — வெவ்வேறு போஸ்களில் — அதில் ஒட்டப்பட்டிருந்தன.

கீழே,

அவரைப்பற்றின 'சரித்திரம்' இருந்தது.

முழுப்பெயர், வயது, உயரம், நிறம், தொழில், பிறகு... குணம்- சிகரெட், மது பாவிப்பவர்-வகையறுக்கள்.

''படித்தீரா?'' என்ற மேலதிகாரி, என் பதிலுக்குக் காத்திராமல், ''இவர் நாளை மாலை 6-30 மணிக்கு 'பண்டாரநாயக்கா இன்டர்நாஷனல் ஏர்போர்ட்'டிற்கு லண்டனிலிருந்து வருகிறார். இவர் மிகப் பெறுமதி வாய்ந்த வைரங்களைக் கொண்டுவருவதாக நம்பத்தகுந்த செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது'' — என்று சொல்லியவாறு ஒரு பேப்பரை என்னிடம் நீட்டினார்.

அது அந்தச் செய்தியின். 'ஃபோட்டோ ஸ்டாட்' செய்யப்பட்ட நகல்.

'ஓஹோ' என்றேன், முகத்தில் எந்தவித ஆச்சரியத்தையும் காட்டாமல்.

''.......கஸ்டம்ஸ் இலாக்கா அதிகாரிகள் ஒருவிசேஷ ஸி.ஐ.டி இன்ஸ்பெக்டரை அனுப்பிவைக்கக் கோரியுள்ளார்கள். ஆகவே......'' என்று இழுத்தார் 'பெரியவர்.'

''நான் போக வேண்டும்'' என்று முடித்தேன்.

''யெஸ், யூ மஸ்ட் கோ தெயர். கஸ்டம்ஸ் அதிகாரிகள்,

அபூர்வமாகத்தான் இந்த உதவியை — விசேஷ C. I. D. இன்ஸ்பெக்டரை கேட்பார்கள். ஆகவே பொறுப்பை வெற்றியோடுமுடிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு'' என்று பெரியவர் சிரித்தவாறு சொன்னார்.

சுலபமாகச் சொல்லி விட்டார்.

ஃ ஃ ஃ

மறு நாள்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள தலைமை அலுவலகத்திலிருந்து, விமான நிலயத்தை நோக்கி, அலுவலகக் காரில் விரைந்தேன்.

கியர் மாற்றும்போது எதிரே பச்சை பியட் காரில் வந்து திரும்பிய அந்த அழகான பெண் என்னைத் தன் கண்களால் வெட்டினாள்.

எனக்கு நேரமில்லை.

பச்சைப் பியட்டை இன்னொரு நாள் பார்த்துக் கொள்வோம்.

இன்று நான் அவசரமாக விரைவதற்கு இன்னுமொரு இனிய காரணமுண்டு.

எதுவா ?

என்னுடன் விமான நிலயம் வரை வாருங்கள், புரியும்.

ஃ ஃ ஃ

விமான நிலயம்.


வெளியே தயாராகக் காத்துக் கொண்டிருந்த அதிகாரி ஒருவர் என்னை வரவேற்றார்.

அடையாள, அறிமுகங்கள் முடிந்து, (அவர் பெயர் டேவிட் ஞானசேகரமாம்) உள்ளே நுழையும்போது,

மெழுகுப் பொம்மைபோல் 5¾அடி உயரத்தில், நீல நிறக் கண்களோடு நின்ற அந்த அழகிய பெண் என்னைப் பார்த்து,

'ஹலோ' என்றாள்.

---



தமிழ் நாட்டு அரசியலில் எம். ஜி ஆரின் 'புரட்சி' எப்படியிருக்கிறது? தி. மு. க. அரசைக் கிடுகிடுக்க வைத்துக் கவிழ்த்து விடப் போவது போல எம். ஜி. ஆர். கட்சி புயலாக வீசிற்று. கருணாநிதி சாதாரண மரமாக இருந்தால் அந்தப் புயலில் வேரோடு சாய்ந்திருப்பார். ஆனால் அவரோ மலையாக நின்றார். அந்த மலையை புயல் ஒன்றும் செய்ய முடியவில்லை. இப்போது புயலின் வேகம் சற்றுத் தணிந்து விட்டது. திண்டுக்கல் இடைத்தேர்தலில்தான் எல்லோருடைய கவனமும் திரும்பியிருக்கிறது. இந்த இடைத் தேர்தலின் முடிவு எப்படியிருந்த போதிலும் அது கருணாநிதி அரசை ஒன்றும் பாதிக்கப்போவதில்லை. தி. மு. க. வுக்கு முதலாவது பெரிய எதிர்க்கட்சியாக அ. மு. தி. க. இன்று விளங்குகிறது. இன்னும் கொஞ்சக் காலத்தில் அந்த முதலாவது இடத்தையும் ஸ்தாபன காங்கிரஸ் பிடித்துவிடக் கூடும் !

உஷா!

—இவள்தான் அந்த இனிய காரணம்! இவள் விமான நிலையத்தில் என்ன வேலை பார்க்கிருள் தெரியுமா?

வேண்டாம். உங்களுக்குச் சொன்னல் அவளைத் தேடிக் கொண்டு போனாலும் போய்விடுவீர்கள். ஆகவே விஷயத்திற்கு வருகிறேன்.—

''ஹலோ'' என்றவளின் கன்னத்தைத் தட்டி அவளுடன் 'பிரைவேட்'டாக மூன்றரை நிமிடங்கள் பேசிவிட்டு உள்ளே நுழைந்தேன்.

—மூன்றரை நிமிடங்களில் அப்படியென்ன பெரிய 'பிரைவேட்' விஷயம் பேசிவிட முடியும் என்று மூளையைக் குழப்ப வேண்டாம் வாசகரே! இது வேறு விஷயம்.

ஆனல், பயப்படவேண்டாம். 'சோஷலாகத்தான் பழகுகிறோம்.—

கஸ்டம்ஸ் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து விட்டு, 'நண்பரின்' வருகையை நோக்கியிருந்தேன், —ஒரு உண்மையான காதலியின் மனத்தோடு.

ஃ ஃ ஃ

நேரம் மிக நெருங்கி விட்டது.

சைரனின் பலத்த சத்தம் காதைக் குடைந்தது.

நான் என்னுடைய சிகரெட் கேஸைத் திறந்தேன்.

ஒரு சிகரெட்டை எடுக்க முனைந்தபோது.—

உஷா என்னருகில் வந்தாள்.

சிகரெட்டை எடுக்காமலேயே கேஸை மூடிப் பொக்கட்டில் வைத்தேன்.

இருவரும் தொடங்கினோம் —பேச.

எங்களுடைய பொதுவான உரையாடல் உச்சக் கட்டத்தை அடைந்தபோது.

விமானம் தரையில் இறங்கியது.

நான் சுறுசுறுப்பானேன்.

விமானத்தில் வந்தவர்கள் கையசைத்தபடியே இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

அதோ, நான் தேடிக்கொண்டிருந்தவர்! கறுப்புநிற கோட் சூட் அணிந்து, நீண்ட 'சைட் பேர்ண்ஸ்' உடன், கண்களில் 'கோ கோ'-பெண்களின்-கண்ணுடியும், வாயிலே 'பைப்'பும், கையிலே 'வோக்கிங் ஸ்டிக்'குமாக. . .

ஆள் வலு கம்பீரமாகத்தான் இறங்கினர் —கையசைக்காமல்.

என் பக்கத்தில் அதிகாரி, என்னை அர்த்த புஷ்டியுடன் உற்றுப் பார்த்தார்.

நான் இலேசாகத் தலையை ஆட்டினேன்.

வரட்டும்! வரட்டும்!

ஃ ஃ ஃ

இப்போது அவர் முறை.

கஸ்டம்ஸ் அதிகாரிகளை அவர் நெருங்கினர், மெல்லிய புன் சிரிப்புடன்.

—புன் சிரிப்புக்களை நம்பக் கூடாது, 'யார்' செய்தாலும்!

அவரது உடமைகளை ஆராய்ந்து முடித்தபின்,

அதிகாரிகள் அவரை ஆராய்ந்துமுடித்தபின்,

அதிகாரிகள் அவரை ஆராயத் தொடங்கினார்கள். ஒரு மூலையில் இருந்து நான் கவனித்துக் கொண்டிருந்தேன்.

எனது கண்கள்—அவைகளைப் பற்றிப் பெண்களிடம் கேட்க வேண்டும். நன்றாக ஏதேனும் சொல்வார்கள்-அவரைக் கூர்ந்து அவதானிக்க, எனது சிந்தனைகள் வேறுவிதத்தில் ஓடின. அந்த மனிதரின் நடை, உடை, பாவனைகளை, நான் பின் பற்றினால் எப்படியிருக்கும்?

ஆகா என்ன ஸ்டைல்!

ஆனால் வயதுதான் சற்று அதிகம். 'கோ கோ' கிளாஸை எவளிடந்தான் வாங்கினாரோ? அழகாயிருக்கிறது!

ஏன், வாயிலே வெறுமனே வைத்திருக்கும் பைப், ஒன்றே போதுமே?

அதைப் போல நானும் ஒன்று வாங்கவேண்டும்.

சே, கூடாது! 'ஹெவி ஸ்மோக்கர்ஸ்' தான் 'பைப்' வைத்திருப்பார்கள்.

'சேஸ்' முடிந்து விட்டது.

ஒன்றும் கிடைக்க் வில்லை.

அதிகாரி என்னை ஏமாற்றத்துடன் பார்த்தார்.

நான் அவரை பார்த்துக் கண்ணடித்தேன்

இரண்டாம் முறையும் 'சேச்' செய் என்று அதற்கு அர்த்தம்.

அவர் மெதுவாக, மறுபடியும் தொடங்கினார்,

'வைரங்களைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால்' -அதை நினைக்கவே எனக்குக் குளிர்ந்தது.

(இது ஒரு குளிர்ச்சியான கதை இல்லையா? மிஸ்...')

உஷாவும் பக்கத்தில் இல்லை, சிறிது புகைக்கவா?

சத்தம் செய்யாமல் ஒரு சிகரெட்டை 'லைட்' செய்தேன்.

அப்பாடா!

இதைப் பார்த்த இன்னொரு அதிகாரியும் என்னுடன் கலந்து கொண்டார்.

எங்களுடைய செய்கைகளினால் கவரப்பட்ட 'எமது நண்பர்' என்னை ஏறிட்டு நோக்கினார்.

நான் புகையை உள்ளே இழுத்து வெளியே விட்டவாறு,



அவரையே வெறித்துப் பார்த்தவாறு நின்றேன்.

மறுபடியும் எனது சிந்தனைகள்...

அவரும் அவருடைய கூலிங் கிளாசும், வாயில் சும்மா இருந்த பைப்பும்...

**ஃபிளாஷ்!**

எனது மூளையில் ஒருவகை மின்சாரம் ஓடியது.

ஒரு கணம் அப்படியே அசையாமல் நின்றுவிட்டு,

அவரை நோக்கி நடந்தேன்.

''மிஸ்டர்! இந்த 'பைப் பைத்' தயவு செய்து தருகிறீர்களா'' —கேட்டேன்.

அவர் மிகவும் நிலைகுலைந்தார்.

சற்று முன்பு எனக்குக் குளிர்ந்ததையும் விட, அவருக்கு இன்னும் கூடக் குளிர்வது எனக்குத் தெரிந்தது.

(ஞாபகப் படுத்துகிறேன், மிஸ்.... குளிர்ச்சியான கதை)

அவர் ஏதும் மறுப்புச் சொல்ல முனையும் முன்னே, நானே 'பைப்'பை எடுத்துக்கொண்டேன்,-'ஞான ஒளி'யில் கண்ணாடி எடுத்த சுந்தரராஜனைப்போல.

பைப் சற்றுக் கனமாக இருந்தது பைப்'பின் தலையை லேசாகத் திருகிப் பார்த்தேன். அது கழன்று கொண்டு வந்தது.

உள்ளே,

மெல்லிய கண்ணாடி போன்ற கடதாசியில், வைரங்கள்!

உண்மையிலேயே வைரங்கள்!

ஃ ஃ ஃ

அன்று இரவு 'லிபர்டி' தியேட்டரின் இருட்டினுள்ளே, உஷா என்னிடம் கிசுகிசுத்தாள்.

''வைரங்கள் 'பைப்'பினுள் தான் இருக்கிறது என்று எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?''.

"எப்படியா? ஒரு சின்ன மனோ தத்துவம். அரை மணித்தியாலத்துக்கு மேல், அவரைச் சோதனைபோட்டோம். அவர் புகைக்கவில்லை. பார், பைப்பைத் தூக்கித் திரிகின்ற ஒரு 'ஹெவி ஸ்மோக்கர்' எப்படித்தான் புகைக்காமல் இருக்க முடியும்? அதுவும், சூழ இருக்கின்ற அதிகாரிகள் புகைத்துக்கொண்டிருக்கும் போது, சாதாரணமாக-தானும் புகைக்க வேண்டும் போல அவருக்குத் தோன்றும் இல்லையா? ''என்றேன் வெகு இலக்கணமாக.

''அடடா! அப்படியா?'' -வியந்தாள்.

"அப்படி அவர் செய்யாமல் இருந்தபடியால்தான், 'பைப்'பின் மீது என்கவனம் விழுந்தது'' என்று முடித்தேன்.

''நீங்கள் கெட்டிக்காரர் தான்!'' -கிளுகிளுத்தாள் உஷா.

''எந்தவிதத்தில்?'' என்று கேட்டவாறு அவளை மிக அணுகினேன் நான்.

இவருக்கும் குளிர்ந்தது.
(பி. கு:- 'ஏர் கண்டிஷன், குளிரோ' அல்லது ஐஸ்கட்டிக் குளிரோ, என்று எண்ணாதீர் ஐயா!)

# கேள்வி பதில்

கி. செல்வராசா, குருநாகல்.

★ அமைச்சர்களுக்குக் கறுப்புக் கொடி பிடிப்பதனால் தமிழ் மக்களின் உரிமைகள் கிடைத்து விடுமா?

பாதிக்கப்பட்டமக்கள் ஏதோ ஒரு வழியில் தமது எதிர்ப்பைக் காட்டத்தானே வேண்டும்? கறுப்புக்கொடிவிஷயமும் இப்படியான ஒரு வழிதான்!

சா சக்திதாசன்,
அக்கரைப்பற்று-7

★ உலகத்தில் ஒழுக்கம் கெட்டு விட்டதா?

ஒழுக்கம் என்பது நாட்டுக்கு நாடு சமூகத்துக்கு சமூகம் வித்தியாசப்படுகிறது. ஒரு பகுதி மக்கள் 'ஒழுக்கம்' என்று நினைப்பதை இன்னொரு பகுதி மக்கள் ஒழுக்கயீனம் என்று நினைக்கிறார்கள்! — உலகம் முழுவதுக்கும் பொதுவான ஒரு கருத்து என்னவென்றால், வயதானவர்கள் இளைஞர் உலகத்தைப் பார்த்து 'ஒழுக்கம் கெட்டுவிட்டது!' என்கிறார்கள். இந்த அபிப்பிராயம் பல்லாயிரம் வருடங்களாகச் சொல்லப்பட்டு வருகிறது!

க. ஜெயன், பண்டாரவளை.

★ ஒரு சிலருக்கு வாழ்க்கை வெறுப்பதன் காரணமென்ன?

தோல்விகளை எதிர்த்துநின்று வெற்றிகாணும்முனைப்புஇல்லாதவர்களுக்குத்தான் வாழ்க்கையில் வெறுப்பேற்படுகிறது!

மு. வேலையா, அட்டன்.

★ எங்கள் பிரதமர் ஸ்ரீமாவோ அம்மையாரை இடதுசாரித் தலைவர்கள் ஒரு பொம்மை போல வைத்து ஆட்டுவதாகச் சொல்லுகிறார்களே?




மற்றவர்களால் ஆட்டப்படக்கூடியவரல்லர் நமது பிரதமர். மற்றவர்களை ஆட்டிப்படைக்கும் திறன்வாய்ந்தவர். இலங்கையை இதுவரை ஆண்ட பிரதமர்கள் எல்லாரையும்விட ஸ்ரீமாவேதான துணிச்சல் மிக்கவர் என்று சொல்லலாம்!

ஏ. கே. தமிழ்ச்செல்வன்,
கொழும்பு-14

★ வாழ்க்கை என்ற சக்கரத்தின் அச்சாணி எது?

கல்வி என்பார் சிலர்; செல்வம் என்பார் வேறு சிலர்; ஆனால் இந்த நாட்டுமக்களின் வாழ்க்கை அச்சாணி இல்லாமலே ஓடிக்கொண்டிருக்கிறதே!



சி. நடனம், யாழ்ப்பாணம்.

★ கீரிமலைக்கு எம். ஜி. ஆர். வருவாரா?

அவரை வருவிப்பதற்கான முயற்சிகள் நடக்கின்றன ஆனால் எம். ஜி. ஆர். இன்றைய நிலையில் தமிழகத்தை விட்டு வருவாரென்று எதிர்பார்க்க முடியாது.

ஆர். கருணாகரன், யாழ்ப்பாணம்.

★ தென்னிந்தியக் கடற்கரைகளிலுள்ள கிராமங்களில் இலங்கையிலிருந்து சென்ற 'கள்ளக்குடியேற்றக்காரர்' வசிக்கிறார்களாமே?

உண்மைதான். ஆனால் அவர்கள் யாரும் இந்தியாவில் குடியேறச் சென்றவர்களல்ல. கடத்தல் வியாபாரத்தைக் கவனிப்பதற்காகச் சென்றிருக்கும் ஏஜன்டுகளும் அவர்களுடைய கையாட்களும்தான் அவர்கள். ஆனால் இலங்கையின் பொருளாதாரம் கீழ்நோக்கியே போய்க் கொண்டிருப்பதையும், இந்தியாவின் முன்னேற்றத்தையும்பார்க்கும்போது இனிமேல் இந்தியாவில் குடியேறுவதற்காகவே கள்ளக்குடியேற்றம் நடந்தாலும் ஆச்சரியமில்லை!

சி. வேலாயுதம், சாவகச்சேரி.

★ கச்சதீவு யாருக்குச் சொந்தம்?

கச்சதீவு, மக்கள் வாழாத — வாழ வசதியற்ற தீவு. இந்தத் தீவைத் தனது ஊர் என்று உரிமை கொண்டாடக் கூடிய மக்கள் யாருமே இல்லை. பக்கத்திலுள்ள இலங்கையும் இந்தியாவும் இத்தீவின்மீது உரிமை கொண்டாடுகின்றன. யார் வல்லவரோ?

ம. கந்தசாமி, பருத்தித்துறை.

★ யாழ்ப்பாணப் பகுதியில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கா கம்யூனிஸ்ட் கட்சிக்கா செல்வாக்கு அதிகம்?

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி நேற்றுப் பெய்த மழைக்கு முளைத்தது. கம்யூனிஸ்ட் கட்சி இங்கே நன்றாக வேரூன்றிவிட்ட உறுதியான மரம்!

வி. சண்முகம், காரைநகர்.

★ தோரஹா படம் பார்த்தீர்களா?

'தோரஹா' இந்தியாவில் வெளிவந்த சமயம் நான் அந்த நாட்டிலிருந்தேன். ஆனால் அந்தப் படத்தைப் பார்க்க முடியவில்லை அவ்வளவு கூட்டம்! மிக விரைவில் இலங்கைக்குவரப்போகிறது. எப்படி இருக்கிறதென்று பார்க்கத்தான் வேண்டும்.

செல்வி பா. ஜோதி, புங்குடுதீவு-1

★ அரசியல் தலைவர்கள் நாட்டின் வறுமையைப் போக்குவதைக் காட்டிலும் தங்கள் வளத்தைப் பெருக்குவதில் ஏன் ஈடுபடுகின்றனர்?

நாடு வேறு, தாங்கள் வேறு என்று பிரித்துப் பார்க்காத பெருமக்கள் அவர்கள்!

ப. இராமலிங்கம், திருக்கோவில்.

★ பழம் பெரும் தலைவரான ஈ.வே ரா., கலைஞர் கருணாநிதியைத்தானே ஆதரிக்கிறார்?

எப்போதாவது எம். ஜி. ஆரின் கையில் அதிகாரம் வருமானால் அப்போது எம். ஜி. ஆரைத்தான் ஈ. வே. ரா. ஆதரிப்பார்.

க. நாகலிங்கம், சுன்னாகம்.

★ கொஞ்ச நாட்களாக ஈழத் தமிழ்ப்பகுதிகளுக்கு அமைச்சர்கள் விஜயம்செய்வது அதிகரித்திருக்கிறதே.

சோழியன் குடுமி சும்மா ஆடாது! ஏதோ ஒரு 'பிளான்' இருக்கத்தான் வேண்டும்!

மாணவர்களுக்கு
ஒரு நல்ல துணைவன்

வரதர்

**மாணவர் அகராதி**

(ஆங்கில - ஆங்கில - தமிழ்)

VARATHAR'S

**STUDENTS DICTIONARY**

[Eng.-Eng.-Tamil]


ரூபா 5-00

(தபாற் செலவு சதம் 60)

வரதர் வெளியீடு,
யாழ்ப்பாணம்.

க. குமாரசாமி, திருகோணமலை.

★ அண்ணன் அமிர்தலிங்கத்தின் போட்டோ வேண்டும். கேட்டால் கொடுப்பாரா? அவருடைய முகவரி என்ன?



போட்டோ அனுப்பிக் கொண்டிருக்க அவரென்ன சினிமா ஸ்டாரா? நீங்கள் விரும்பினால் 'கலைஞானி ஸ்ருடியோ, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரியில், போட்டோவை விலைக்கு வாங்கி அவருக்கு அனுப்பிவைத்துக் கையொப்பமிட்டுத் தரும்படி கேட்கலாம். அவருடைய முகவரி; அ. அமிர்தலிங்கம், மூளாய், சுழிபுரம்.

எஸ். செல்வராணி, கொழும்பு-5

★ சாவித்திரி—ஜெமினி கணேசன் இல்லறம் முறிந்து கிடக்கிறதே! கே. ஆர். விஜயாவின் இல்லறமும் இப்படி ஆகிவிடுமா?

சாவித்திரிக்குச் சுயநலம் சற்று அதிகம். தன்னுடைய கை உயர்ந்து நிற்க வேண்டுமென்றும் விரும்புபவர். ஆனால் விஜயாவிடம் இந்தக் குணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இதனால் விஜயாவின் வாழ்வில் முறிவு ஏற்படும் வாய்ப்புக்குறைவு.

VELLI—Tamil Monthly Vol. 2 No. 16 March 93




எமது புதிய கிளை நிலையம்:

**ராணி ஆபரண மாளிகை**

**63, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.**

அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: தி. ச. வரதராசன்
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.